## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஐந்தாம் பத்து

### ஐந்தாம் திருமொழி - வெருவாதாள்
### திருவரங்கம் 2

** வெருவாதாள் வாய் வெருவி *
வேங்கடமே! வேங்கடமே! என்கின்றாளால் *
மருவாளால் என் குடங்கால் * வாள் நெடுங்கண்
துயில் மறந்தாள் ** வண்டார் கொண்டல்
உருவாளன் வானவர் தம் உயிராளன் *
ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் சிந்திக்கேனே? 1

கலை ஆளா அகல் அல்குல் * கனவளையும்
கை ஆளா என் செய்கேன் நான்? *
விலை ஆளா அடியேனை * வேண்டுதியோ?
வேண்டாயோ? என்னும் ** மெய்ய
மலை ஆளன் வானவர் தம் தலையாளன் *
மராமரம் ஏழ் எய்த வென்றிச்
சிலை ஆளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் சிந்திக்கேனே? 2

மானாய மென்னோக்கி * வாள் நெடுங்கண்
நீர் மல்கும் வளையும் சோரும் *
தேனாய நறுந்துழாய் அலங்கலின் *
திறம் பேசி உறங்காள் காண்மின் **
கானாயன் கடி மனையில் தயிர் உண்டு
நெய் பருக * நந்தன் பெற்ற
ஆனாயன் * என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 3

தாய் வாயில் சொற்கேளாள் * தன் ஆயத்தோடு
அணையாள் தடமென் கொங்கை
யே * ஆரச் சாந்தணியாள் * எம்பெருமான்
திருவரங்கம் எங்கே? என்னும் **
பேய் மாய முலை உண்டு இவ்வுலகுண்ட பெரு
வயிற்றன் * பேசில் நங்காய்! *
மாமாயன் என் மகளைச் செய்தனகள் *
மங்கைமீர்! மதிக்கிலேனே 4

பூண்முலை மேல் சாந்தணியாள் * பொருகயல்
கண் மை எழுதாள் பூவை பேணாள் *
ஏண் அறியாள் எத்தனையும் * எம்பெருமான்
திருவரங்கம் எங்கே ? என்னும் **
நாண்மலராள் நாயகனாய் * நாம் அறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி *
ஆண்மகனாய் என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 5

தாதாடு வன மாலை * தாரானோ?
என்றென்றே தளர்ந்தாள் காண்மின் *
யாதானும் ஒன்று உரைக்கில் * எம்பெருமான்
திருவரங்கம் என்னும் ** பூமேல்
மாதாளன் குடமாடி மதுசூதன் *
மன்னர்க்காய் முன்னம் சென்ற
தூதாளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் சொல்லுகேனே? 6

வாராளும் இளங்கொங்கை * வண்ணம்
வேறு ஆயினவாறு எண்ணாள் * எண்ணில்
பேராளன் பேர் அல்லால் பேசாள் * இப்பெண்
பெற்றேன் என் செய்கேன் நான்? *
தாராளன் தண்குடந்தை நகராளன் *
ஐவர்க்காய் அமரில் உய்த்த
தேராளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் செப்புகேனே? 7

உறவாதும் இலள் என்று * ஒழியாது
பலர் ஏசும் அலர் ஆயிற்றால் *
மறவாதே எப்பொழுதும் * மாயவனே!
மாதவனே! என்கின்றளால் **
பிறவாத பேராளன் பெண்ணாளன்
மண்ணாளன் * விண்ணோர் தங்கள்
அறவாளன் * என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 8

பந்தோடு கழல் மருவாள் * பைங்கிளியும்
பால் ஊட்டாள் பாவை பேணாள் *
வந்தானோ! திருவரங்கன் * வாரானோ?
என்றென்றே வளையும் சோரும் **
சந்தோகன் பௌழியன் ஐந்தழல் ஓம்பு *
தைத்திரியன் சாம வேதி *
அந்தோ! வந்து என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 9

** சேல் உகளும் வயல் புடை சூழ் * திருவரங்கத்து
அம்மானைச் சிந்தை செய்த *
நீல மலர்க்கண் மடவாள் நிறை அழிவைத் *
தாய் மொழிந்த அதனை ** நேரார்
கால வேல் பரகாலன் * கலிகன்றி ஒலி
மாலை கற்று வல்லார் *
மாலை சேர் வெண்குடைக் கீழ் மன்னவராய்ப் *
பொன்னுலகில் வாழ்வர் தாமே 10

**அடிவரவு:** வெருவாதாள் கலை மான தாய் பூண் தாதாடு வாராளும் உறவு பந்தோடு சேல் கைம்மானம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---